செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

உ

[வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௦] யாழ்ப்பாணம்:- கீலக ஞு ஆவணி மீ உ அ உ வெள்ளிக்கிழமை (13-9-1968) [இல-உ

## வெளிமலை என்பதே திருவேரகம்

(— தகவல்: திரு. வை இரகுநாதமுதலியார்)

(ஆதாரம் — சென்னை இந்துப் பத்திரிகை)

சங்கப்புலவர் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படை நூலில் திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை, குன்றுதோறாடல், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) என்ற ஆறு இடங்களையும முருகனின் ஆறு படை வீடுகளாகக் குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகாரம பாண்டிநாட்டிலுள்ள செங்கிலும், கொங்கு நாட்டிலுள்ள செங்கோடும், சோழநாட்டிலுள்ள வெண்குன்றும சேர நாட்டிலுள்ள திருவேரகமும் முருகனின் நான்கு புனித ஸ்தலங்கள் என்று குறிப்பிடுகின்றது. திருவேரகம் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சுவாமிமலையின் மறுபெயராகவிளங்குகின்றது ஆனல் கிடைக்கும் ஆதாரங்கள் திருவேரகஸ்தலம் கன்னியாகுமரி மாவட்டதிலுள்ள நாஞ்சில் நாட்டில் இருக்கும வேளிமலையிலுள்ள குமரன் கோவிலைக் குறிக்கின்றது என்பர் இம்மலையிற்றான் முருகன் வள்ளியை மணந்தான என்றுங் கூறுவர்.

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் குன்றக் குறவையில் குறிப்பிடப்படும் வெண்குன்று சுவாமிமலை என்றும் திருவேரகம் மலைநாட்டிலுள்ள ஓர் இடம் என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வாறே திருமுருகாற்றுப்படைக் குறிப்பு எழுதிய நச்சினார்க்கினியரும் குறிப்பிடுகின்றார். வேளிமலை ஸ்தலம் மலைநாட்டின் ஒரு பகுதியாகவே இருக்கின்றது. முருக பக்தர்கள இன்றும் வேளிமலையிலுள்ள முருகனைத் திருவேரகத்தில் நக்கீரர் வர்ணித்தது போலவே வணங்குகின்றனர்

'வேளி மலை' என்ற பெயர் வேள்வி மலை என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். வேள்விமலை என்பதன் பொருள் முருகனுக்கும வள்ளிக்கும் திருமணம் நடைபெறற இடம் என்பதாம். திருக்குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடராசப்ப கவிராயராற் குறிப்பிடப்படும் நாஞ்சில்நாட்டுவேள்விமலையும இதுவேயாகும். தமது நூலில்திரிகூடராசப்ப கவிராயர் முருகன் வள்ளி திருமணத்தை விபரித்து வள்ளிக்கு யானைகளிடம் இருக்கும் பயத்தையும்கூறி, முருகன் வேங்கை மரமாக மாறியதையும் கூறுகின்றார்.

வேளிமலைக் கோயிலுக்கு வருபவர்கள் 38 படிகள் ஏறியே போகவேண்டும். இங்குள்ள முருகனின் சிலை 8 அடி 8 அங்குல உயரமுள்ளது. வள்ளியின் சிலை 6 அடி 2 அங்குல உயரமுள்ளது. வேங்கை மரத்திற்கும தனியாகக் கோயில் உள்ளது. வேங்கை மரமே இதன் தல விருட்சமாகும். இப் புனித இடத்திற்றான் முருகக் கடவுள் வேங்கை மரமாக மாறினார் என்பர்.

இக்கோவிலிலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள மலையடிவாரத்தில் ஓர் கல்யாண மண்டபமும், வள்ளிக்கு ஓர் சிறிய கோயிலும் இருக்கின்றது. வேளிமலைக்குச் சமீபத்தில் தினைப்புனம் என்ற இடமும் உள்ளது இக் கல்யாண மண்டபத்தில் பங்குனி உத்தர நன்னாளில் நடைபெறும் முருகன் வள்ளி திருக்கல்யாணம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குறவர்களுக்கும் முருகனுக்கும் இடையே நடைபெறும் சண்டை பார்ப்பதற்குக் கண்கொளாக் காட்சியாகும்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோயில்களின் சரித்திரங்களை ஆராய்ந்தால் வள்ளி திருக்குறுங்குடி என்னும் ஊரில் பிறந்தவள் என்றும் குறவர்களின் தலைவனான நம்பி என்பவனால் வளர்க்கப்பட்டாள் என்றும் அறிகின்றோம். வள்ளியூர் நம்பி தலைவன் பட்டையம் என்ற இடங்களும் நம்பியாறு எனப்படும் ஆறும் முருகன் வள்ளி திருமணம் நாஞ்சில் நாட்டிலுள்ள வேளிமலையில் நடைபெற்றது எனபதற்குச் சான்றுபகர்கின்றன. எனவே எல்லா வகையாலும் இப் புனித இடம் முருகனின் ஆறு படை வீடுகளிலொன்றான திருவேரகமாக இருக்கலாம். —:—

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தோல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

### நாவலர் நல்வாக்கு

சூதாடலை விருப்புவாய் ஆயிகாலமும் கருத்தும் பெறப்படாமையால் கல்வி, செல்வம், ஊண் உடை என்பன உன்னை அடையாவாம். ——

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 15-9-68 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் மேற்படி கல்லூரிக் குமாரசுவாமி மண்டபத்தில் இடம் பெறும்.

கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபன அதிபர் உயர் திரு. கே. சி. தங்கராசா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து உரை நிகழ்த்துவார்கள். திருமதி ஏ குமாரசுவாமி அவர்கள பரிசில்களை வழங்குவார்கள்.

### தாயகத்து ஆதீனங்களில் ...

திருக்கைலாய பரம்பரை தருமபுர ஆதீன முதலவர் கைலை சுப்ரமண்ய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சென்ற ஆவணி மூல நாளன்று ஆதீன ஸ்தாபகரான ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தரால மதுரையம்பதியில் பொற்றாமரைத் தடாகத்திலிருந்து எடுக்கப் பெற்று ஆதீனத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்று, ஆதீனத்து ஆன்மார்த்த மூர்த்தமாக மகா சந்நிதானங்களால் பூசிக்கப்பட்டு வருகின்ற ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக பூஜாராதனைகள் நடத்தியதுடன், ஸ்ரீ சேரமான் பெருமாள் நாயனாரால் இயற்றப்பட்ட 'பொன்வண்ணத் தந்தாதி''யைக் குறிப்புரையுடன் 594 வது வெளியீடாக அச்சிட்டு எல்லோர்க்கும் அன்பளிப்புச் செய்து அன்று மாலை 7 மணியளவில் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நடைபெறற பட்டமளிப்புவிழாவில் பேராசிரியர் டாக்டர் திரு வ. ஆ. தேவசேனாபதி எம். ஏ., பி. எச். டி. அவர்கட்கு 'சித்தாந்த வித்தகர்' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கி அவ் விருது பொறிக்கப்பட்ட பதக்கத்தை அளிதது்ச் சாதரா அணிவித்து அருளாசி கூறிக் கௌரவிததனர்.

x x x

திருவாவடுதுறை ஆதீன முதல்வர், அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் சிதம்பரம் சிங்காரத் தோப்பில் ஆவணி மீ உத்திர நன் நாளில் ஸ்ரீ மறை ஞான சம்பந்தர் குருபூசை விழாவைச் சிறப்புடன் நடத்திவைத்தார்கள்.

'இந்துசாதனம்' தெம்பாதிருப்
ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன்

## அன்னை அபிராமியின் அருள்பெருகு திருவளம்

[ ஆசிரியர் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா ]

(முன் வளர்ச்சி — 10 ;

49. இசைவடிவாய் நின்ற நாயகியே அஞ்சல் என்பாய்

யாழின் நரம்பைப் பொருந்திய சங்கீத நாத ரூபமாகி உலகெங்கும் நிறைந்து நிற்கின்ற தலைவியாகிய அபிராமி தேவியே! இந்த உடம்பாகிய குடிசையை அடைந்து அதிலே ஒதுங்கிக் குடிபுகுந்த என்னுயிரைக் கொடிய யமனும் கவர்ந்து கொள்ளப் படும்பொருட்டு பிரமன் விதித்த ஆயுளின் எல்லையிலே மனங்கலங்கும் அம்மரணவேளையிலே, அரம்பை முதலாம் தேவமகளிர் சூழ்ந்து சேவிக்க எழுந்தருளி வந்து வளையல்களை தரித்த திருக்கரத்தினால் அபயம் அளித்து அன்பனே அஞ்சற்க எனத் திருவாய்மலர்ந்து பாதுகாத்தருளுக

50 உடையாள் சரணம் நமக்கு அரண்

எங்கள் அபிராமி தேவியே அகிலலோகநாயகி அவளே நான்குமுகமுடைய பிரமபத்தினி. அவளே நாரணன் தேவி, அவளே கைகளில் தாமரை முதலாய ஐந்துமலரம்புகளைத் தாங்கியவள், அவளே சம்புசக்தி அவளே சங்கரனது சக்தி, அவளே சாமளாதேவி நச்சுவாயினையுடைய நல்ல அரவமாலை புனைந்தவள் அவளே! வராகசக்தி, சூலந்தரித்தவள, மதங்கமுனி புத்திரியும் அவளே யாவள இத்தனைச்சிறப்புவாய்ந்த அபிராமி தேவியின் திருவடிகளே நமக்குப் புகலிடமாம்

51. நாயகி அடியார் மரணம் பிறவி இரண்டும் எய்தார்

பொன், வெள்ளி, இரும்பு என்னும மூன்றினாலாகிய கோட்டைகளே தமக்கு உறுதிப்பொருளென மதித்த முப்புரத்தவுணரை வேரறுத்த சிவபிரானும் விஷ்ணுவும் வணக்கம வணக்கம் என விண்ணப்பஞ் செய்ய நின்றருளுகின்ற தலைவியாகிய அபிராமி தேவியின மெய்யடியார்கள இப்பூமியின் கண்ணே பிறப்பு இறப்பு என்னும இரண்டையும் அடையமாட்டார்கள்

52. தவமுடையார்க்குளவாகிய சின்னங்கள்

பிறைச்சந்திரனைச் சடாமுடியில் தரித்தருளிய சிவபிரானது திருத்தேவியாராகிய அபிராமி அம்மையாரது

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

### வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினது அரிய சாதனை

5-9-68 வியாழக்கிழமை வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினது வரலாற்றில் ஒரு பொன்னாள். சென்ற முப்பத்தொரு ஆண்டுகளாக வட இலங்கையில் கூட்டுறவை வளர்த்து வந்த சங்கங்களுக்கு இச் சபை தாயாகும் இச்சபைக்கு ஒரு சொந்தமான அழகுள்ள கட்டடம்தேவையெனக் கூட்டுறவாளர் கருதினர். அதற்காக வேண்டி உழைத்து ரீகல் பட மாளிகைக்குக் கிழக்கருகி

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE HINDU ORGAN

# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

கிலக ஞூ ஆவணி மீ உ-வு-உ வெள்ளிக்கிழமை [1968]

# கோணேச்சராலயச்சூழலைப் புனிதநகராக்குக

ஈழநாடென வழங்கும் இலங்கையில் தேவாரப் பெற்ற புராதன தலங்கள் மேற்குக் கரையிலுள்ள திருக்கேதீச்சரமும் கிழக்குக்கரையிலுள்ள திருக்கோணசலமுமாகும். இத் தலங்கள் எக் காலத்தில் உற்பத்தியாயினவென்று சொல்ல முடியாது. திருக்கோணசலமென்னும் தலம் கிறீஸ்துவுக்குமுன் 1300-ஆம் ஆண்டுவரையில் அமைந்ததெனவும் மநுநீதிகண்ட சோழனை இத் தலத்தைக் கட்டினனெனவும் ஐதிகமுண்டு. அந்த மநுநீதிகண்ட சோழன் குளக்கோட்டு மகாராசனுடைய முன்னோனவன். இத் திருக் கோயிலின் எஞ்சிய திருப்பணியைக் குளக்கோட்டு மகாராசன் பூர்த்திவித்து இதன் நித்திய நைமித்திகங்களை மேன்மைபட நடத்தினனென்பது வரலாறு. இது தட்சிண கைலாசமெனவும் வழங்கும். இத் திருக்கோயில் பல மண்டபங்களோடும் திருவீதிகளோடும் கூடியதாய் விளங்கியது.

ஆதிகாலத்தில் இலங்கையை யாண்ட இராக்கதனாகிய இராவணனுடைய தாயானவள் அவனது தலைநகராகிய இலங்காபுரியிலிருந்து தினந்தோறும் சென்று கோணேசப் பெருமானை வழிபட்டு மீளும் நியதியுடையவளாயிருந்தாள். தாய் தனமும் தூரமிக்க இடத்திற் சென்று பெருமானை வழிபடுதல் சிரமமென்று நினைத்து அவன் இத்தலத்தைப் பெயர்த்து தன் தலைநகருக்குக் கொண்டுபோக முயன்றும் அநுகூலமடையவில்லை. பெயர்க்குமாறு வெட்டிய அடையாளம் இன்றும் காணக்கூடியதாயிருக்கின்றது.

கஜவாகு என்னும் சிங்கள மன்னன் இத் தலத்திற்கு ஊறு விளைக்கக் கருதிய காலத்தில் கண் பார்வையையிழந்து சஞ்சலமடைந்தான். பின்பு கோணேசப்பெருமானுடைய அநுக்கிரகத்தினால் கண்பார்வையைப் பெற்றான். கோணேசர் திருக்கோயிலை முன்னிருந்ததைக் காட்டிலும் சிறந்த முறையிலமைப்பித்தான். கண் பார்வை கிடைத்தபொழுது அவ்வரசன் முழுகிய தீர்த்தத்திற்கு 'கண் தழை' என்னுங் காரணப் பெயர் வழங்கலாயிற்று. அக் கண் தழைக் குளமே இக்காலத்தில் தம்பலகாமத்திலுள்ள வயல்களுக்கெல்லாம் நீர் வழங்குவதாகும்.

பிற்காலத்தில் இலங்கையை யாண்ட கன்ஸ்ரன்ரைன் டீசா என்ற பறங்கித் தேசாதிபதி திருக்கோணமலையில் ஒரு கோட்டையைக் கட்ட எண்ணித் திருக்கோயிலை யிடித்துக் கோயிற் கற்களைக் கொண்டு சென்று பிறெட்றிக் கோட்டையைக் கட்டினனென்று கூறுவர்.

கோயிலற்றுப் போகவே மக்கள் கோணேசப் பெருமானைக் குறித்த மலை விளிம்பில் ஒரு இடத்தில் வழிபட்டனர். பூசகர் தேங்காய் வெற்றிலை பாக்குப் பழம் நிவேதித்து கோணேசப் பெருமானைச் சர்வவியாபியாகப் பாவனை செய்து அடியார்களுடன் வழிபட்டனர்.

1950-ஆம் ஆண்டில் நகரசபை வேலையாட்கள் ஒரு இடத்தில் கிணறொன்றைத் தோண்டும்போது நான்கு அடி ஆழத்தில் அற்புதமான — அழகொழுகும் பழமைத் திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. இச் செய்தியைக் கேள்வியுற்ற மக்களெல்லாம் பக்தி பரவசத்தில் மூழ்கி ஆனந்தமடைந்து திருவருளின் பெருங்கருணையை வியந்தனர். இத்திருவுருவங்கள் இலங்கை முழுவதும் மக்களுடைய தரிசனத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டன. சிறப்பாக திருக்கோணமலை வாசிகளுடைய இறையன்பினாலும் — பொதுவாக இலங்கையின் மற்றைய இடங்களிலுள்ள சைவாபிமானிகளுடைய ஆர்வத்தினாலும் திருக்கோணமலையில் ஆகம முறைப்படி சிறந்த கருங்கற் றிருப்பணியோடு கூடியதாக ஒரு சிவாலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் வெகு சிறப்பாக நடைபெற்ற பின்பு நித்திய நைமித்திகங்கள் கிரமமாக நடைபெற்று வருகின்றன.

ஃபிறெட்றிக் கோட்டையைப் புனிதத் தலமாகப் பிரகடனஞ் செய்தற்குரிய திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கு கௌரவ உள்ளூராட்சி அமைச்சரவர்கள் ஒரு விசாரணைக் குழுவை நிறுவினர். இதற்கிடையில் பௌத்த பிக்கு ஒருவரும் பிறரும் ஃபிறெட்றிக் கோட்டையைப் புனிதத் தலமாக்குவதைப்பற்றி கௌரவ பிரதமந்திரி அவர்களிடம் ஆட்சேபனை தெரிவித்தனர். அவ்வாட்சேபனையின் பிரகாரம் ஃபிறெட்றிக் விசாரணைக் குழு கலைக்கப்பட்டுவிட்டதென்பதையறிந்து மிகவும் கவலையுறுகின்றோம்.

சைவ மக்களுடைய புராதனமான இத் திருக்கோவில் உற்பத்தியாயிருக்கும் 'பிறெட்றிக் கோட்டை' எனும் மலையைப் புனித நகராகப் பிரகடனஞ் செய்யும்படி இந்துமக்கள் சார்பாக இலங்கை அரசாங்கத்தினரை விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். இதுவே ஈழத்துத் தமிழ்பேசும் மக்களதும் — சைவ மக்களதும் நெடுநாளைய விருப்பமாகும் என்பதையும் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். நாட்டில் நாஸ்திகக் கொள்கையை நீக்கி ஆஸ்திகக் கொள்கையை நிலைநாட்ட இச் செயல் பேருதவியாயிருக்கும்.

அநுராதபுரம் எவ்வாறு பௌத்த மக்களுடைய வணக்கத்துக்குரிய புனித நகராக விருக்கின்றதோ அதேபோல் திருக்கோணமலையும் இந்துக்களுடைய ஒரு ஆராதனைக்குரிய புனித தலமாகவுள்ளது. இதை நல்லெண்ணமுடைய எவருமே மறுக்க முடியாது. எல்லாச் சமயத்தவர்களுக்கும் அவரவர்களுடைய சமயச் சுதந்திரத்தை வழங்கும் கொள்கையையுடைய நமது நாட்டின் பிரதம மந்திரியவர்களுக்கு எங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

---

## அன்னை அபிராமியின்

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

திருவடித்தாமரை மலர்களுக்கு முற்பிறவிகளிலே பேரன்பு செய்த தவத்தை உடைய அடியவர்களுக்கு இப்பிறவியிற் காணப்படும் அடையாளங்கள் எவை யெனில், தேர், யானை, குதிரை, சிறந்த மணிமுடி, பல்லக்கு, சேமிக்கப்பெற்ற பொன், விலைபெற்ற அணிகலன்கள் முதலாயினவாம்.

### 53. இருபோலுந் தவமில்லை

மிகச்சிறிய திருமருங்கிலே சாத்தியருளிய செம்பட்டாடையும்,, பராஞானம் அபரஞானம் எனப்படும் இரு பெரிய தனபாரங்களும், அவற்றின் மீது அணி பெறப்புரளும் முத்துமாலைகளும், பிச்சிப்பூமாலை யழகு குறைத்தரித்த மிகக்கரிய திருக்கூந்தலும், சூரியன் சந்திரன் அக்கினி என்னும் மூன்று கண்களும் ஆகிய இவைகளைத் தம்மனத்தில் உறுதியாகத் தியானித்துக் கொண்டு ஒன்றிய நிலையில் இருக்கும் சிவயோகிகளுக்கு ஞானம் வழியாக வீடுபேற்றையாளும் இச்சிவயோகம் போன்ற தவம் பிறிதொன்று இல்லை

### 54. திரிபுரை பாதங்கள் சேர்மின்

மெய்யன்புகொண்ட அடியார்களே! ஒரு செல்வரிடம் சென்று உமது வறுமையைச் சொல்லி அவர் முன் எளிமையோடு நில்லாதொழிகலை மனத்தில் உறுதியாகக் கொள்ளுவீராயின், எக்காலமும் தவமே செய்து பழகாத உலோகங்களித்து ஒருபோதும் சமியேன் செல்லாமலே தடுத்தாட்கொண்டருளிய, திரிபுரசுந்தரியாகிய அபிராமி தேவியினுடைய திருவடிகளைப் புகலடையுங்கள்.

### 55. மூன்றாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்வி

ஆயிரம் மின்னல்கள் ஒருங்குதிரண்ட பெண்ணியல்பு பொருந்திய கை கால் முதலிய திருவுறுப்புகளுடன் கூடி ஒளிரும் திருமேனியுடையவர்; தமது பிராணநாயகரும் மெய்யடியார்களும் திருவுளம் மகிழுதற்குக் காரணியாகிய பேரானந்த வல்லியாக விளங்குபவர்; அருமைவாய்ந்த வேதங்களுக்கு முதலாகியும் அவற்றின் நடுவிடமாவுமாகியும் முடிவாகியும் இருக்கின்றவர்; அத்துணைப் பெருமைவாய்ந்த அபிராமிதேவியை ஆன்மாக்கள் தியானியாமல்விடினும் தியானிக்கினும் அவை பெறவிரும்பும் பொருள் யாதுமில்லை ஆன்மவிடுதலையாகிய மோட்சம் ஒன்றே விரும்பப்படுவது.

### 56 உலகெங்குமாய் நின்றுள்

ஒரேவடிவுகொண்ட பராசக்தி சமஷ்டிவடிவம் பலவேறு சக்திகளின் உருவங்கொள்ளுதல் வியஷ்டிவடிவம், அவ்வாறெல்லாம் விரிந்து உலகெங்குமாகி நிற்கும் அன்னை அபிராமி தேவி அலையனைத்தையும் விளங்கச் செய்யும் (வியாப்பிய) வகையினால் வேறாகியும் நிற்கிறார் அத்தகைய எம்பிராட்டி தமியேனது மனத்துள்ளே நீங்காது அருள்வது ஒரதிசயமாகுமா? இச்சைவசித்தாந்த நுண்பொருளைச் சலப்பிரளயகாலத்தில் ஆலிலைமேல் அறிதுயிலமரும் விஷ்ணுமூர்த்தியும் பரமபிதாவாகிய சிவபிரானும் மெய்ஞானிகளுமே உணருவார்கள். (வளரும்)

---

## அணிந்துரை அரங்கம்

திருக்கேதீச்சரம்
மகாகும்பாபிடேக வெளியீடு
'திருக்கேதீச்சரம்'
ஆக்கியோன்:
திரு. ஆ கந்தையா M. A.
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
கொழும்பு:
கிடைக்குமிடம் :
ஸ்ரீ காந்தா அச்சகம்
புத்தகசாலை.
விலை ரூபா 3-00.

திருக்கேதீச்சரம் ஈழநாட்டிலுள்ள தேவாரம் பெற்ற சிவத்தலங்களிலொன்று. இத் தலம் மிகவும் புராதனமானது எப்பொழுது கட்டப்பட்டதென்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. கி. மு. 4-ம் நூற்றாண்டில் மாந்தோட்டையில விஜயன் இவ்வாலயத்தில் வழிபட்டதாகச் சரித்திரம் கூறுகின்றது. கி மு. 7-ம் 9-ம் நூற்றாண்டுகளில் தேவார காலங்களில் உன்னத நிலையிலிருந்தது. 16-ம் நூற்றாண்டளவில் இலங்கையை ஆக்கிரமித்த போத்துக்கேயரால் இவ்வாலயம் அழிக்கப்பட்டது. அதன் பின்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இவ்வாலய புனரமைப்புக்கு வித்திட்டனர். நாவலரவர்கள் மறைந்த பின்பு திருக்கோயிலிருந்த நிலம் சைவமக்களால் விலைக்கு வாங்கப்பட்டு ஒரு ஆலயம் அமைக்கப்பட்டது. காலத்துக்குக் காலம் திருக்கோவிலில் திருத்தங்கள் செய்யப்பட்டன. 1950-ம் ஆண்டில் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையாரிடம் ஃ கோயில் ஒப்படைக்கப்பட்டது. சபையார் கோயிலில் அநேக திருத்தங்கள் செய்துள்ளனர். கருங்கற்களினால் சுவாமி கோயிலையும் அம்பாள் கோயிலையும் அமைப்பதற்குரிய முயற்சிகள் நடைபெறுகின்றன. இராஜகோபுரமொன்று பெருந்தொகைச் செலவில் கட்டப்பெற்று அதனுடைய கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. ஃ கும்பாபிஷேக ஞாபகமலராக இந்நூல் வெளியிடப்பட்டது. இந்நூலாசிரியர் ஒரு சிறந்த சிவபக்தன். தமிழ்மொழியைச் சிறந்த அறிஞர்களிடம் கற்றவர், சைவ மரபின்படி நூல்களை எழுதும் ஆற்றல் படைத்தவர். 'இந்துசமயம்' என்னும் சைவசமய பாடநூல்களையும் மலரும் மணமும் என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

திருக்கேதீச்சரத்தின் வரலாற்று மகிமைகள் இப்பொழுது நடைபெற்று வரும் திருப்பணிகளின் விபரங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. சிறந்த தமிழ்நடையில் எவரும் படித்து அறியக்கூடிய முறையில் இந்நூல் எழுதப்பட்டுளது.

திருக்கேதீச்சரத்தினுடைய திருப்பணிகளுக்கும் பிற விருத்திகளுக்கும் இந்நூலைக் கற்பவர்கள் உதவிசெய்ய முன்வருவார்கள்.

இந்நூலை விற்றுச் சேரும் வருவாய் திருக்கேதீச்சரப் புனருத்தாரணத்துக்கே உரியதாகும். சைவ பக்தர் யாவரும் இந்நூலை விலைக்குப் பெற்றுப் படித்தல் வேண்டும்.

# திருவாதவூரடிகள் வரலாறு

## ஹாலாஸ்ய மான்மியத்தின் வண்ணம்

— பிரம்மஸ்ரீ K. சுப்பிரமணிய ஐயர் —

அத்தியாயம் – 65.
(முன்வளர்ச்சி – 21)

மறியலிலிருந்து (விடுதலை பெற்று) வெளிவந்த அவர், சுந்தரேசருடைய கோபுரத்தையும் கலசத்தையும் தங்கமயமாகக்கண்டு "காப்பாற்று" என்று கூறினர். பின்பு மங்களத்தைக் கொடுக்கக்கூடிய ஸ்தோத்திரங்களால், சிவபெருமானைத் துதித்தார்.

20. சுந்தரேசனும் அந்தத் துதியைக் கேட்டுவிட்டு கருணைக் கடலான அந்த ஜீவன முக்தேசுவரர் மகிழ்ச்சியுற்று, குதிரைகளை ஆக்க நந்தி முதலான கணநாதர்களுக்குக் கட்டளையிட்டார். சிவகணங்களையும் (அவைகளை ஓட்டிச் செல்லும்படி) கட்டளையிட்டார்.

சுந்தரேசனுடையகட்டளையினால் கணங்களெல்லாம் மகிழ்ச்சியுற்றவைகளாய், பூமியிலுள்ள எல்லா நரிகளையும் சிறந்த குதிரைகளாக ஆக்கினர்.

குதிரைச் சாரதி வேஷம் பூண்டு கொண்டு மாயா மனித உடல் தாங்கி பிரதம கணங்களெல்லாம் அந்தக் குதிரைகளின் மேலேறி அமர்ந்து கொண்டனர்.

பற்பலவிதமான 'காகளம்' முதலான வாத்தியங்களை ஒலிக்கச் செய்தனர். பின் அந்த கணங்கள் சிவபெருமானை நோக்கிப் புறப்பட்டனர். (தொடரும்)

## நவராத்திரி விரதம்

நவராத்திரி விரதம் எதிர்வரும் புரட்டாதி மீ 7-உ (23-9-68) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி புரட்டாதி மீ 15 உ (1-10-68) பூர்த்தியெய்தும். புரட்டாதி மீ 14 உ (28-9-68) சனிக்கிழமை சரஸ்வதி பூஜாரம்பம்.


உ
படித்துவிட்டீர்களா ....?
சைவபரிபாலனசபை வெளியீடு
பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்கள்
எழுதிய
**"நாவலர்"**
விலை: ரூபா 1-00
தொகையாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
மனேஜர்,
சைவப்பிரகாசஅச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்


### ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளின் சந்தாதாரரைத் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். மனேஜர்.

ஸ்ரீ கற்பக விநாயகர்கோயில்

6-9-68 ல் வண்ணை – சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய அலங்கார உற்சவம் நிறைவெய்தியது. அன்று காலை சங்காபிஷேகமும் மாணிக்கவாசகருக்குக் கும்பாபிஷேகமும் நிகழ்ந்தது.


யாழ்ப்பாணம்
**— ஐக்கிய இலாபநிதி —**
1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகளை ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
எங்கள் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்.


COMMISSION SALE

## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ இல. 9455

புலோலி தெற்கு சமைந்தர் கதிர்காமர் முருகேசு கையம்பெண் சின்னம்மாபிள்ளை —வழக்காளி

எதிராக

கரணவாய் வடக்கு சுந்தையா தாமோதரம்பிள்ளை —எதிரி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1968-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி வரணிக்கோயிற்பற்று வரணி இயற்றாலை இறை வெள்ளைப்புற்றுக்குக் கிழக்கு வயலும் மற்று பிரிவுகளும் நில பரப்பு 60. எல்லை கிழக்கு காம்பைக் குறிச்சியும் சந்திரசேகரக்குருக்கள் பஞ்சாட்சரக்குருக்களுக்கும் மற்றுபேருக்குமுடைய ஆதனங்கள். வடக்கு மாணிக்கவாசகக்குருக்கள் செல்லையாக்குருக்களுக்கும் மற்றுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு தாமோதரம்பிள்ளை இராமலிங்கத்தின் உரிமைக்காரருக்கும் மற்றுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு சந்திரசேகரக்குருக்கள் ஐயாத்துரைக்குருக்களுக்கும் மற்றும்பருக்குமுடைய ஆதனம். இதடங்கலிற் செரியலாய் ½ பங்கும். பதிவு F 239/4.

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை | ரூபா | 1797 20 |
| ரூபா 1000க்கு 16-1-67 தொடக்கம் 14-5-67 வரை 10 வீத வட்டி | ரூபா | 33 33 |
| ரூபா 1830 53க்கு 15-5-67 தொடக்கம் 15-8-68 வரை 5 வீத வட்டி | ரூபா | 114 37½ |
| செலவு | ரூபா | 184 35 |
| மொத்தம் | ரூபா | 2129 25½ |

"உமாபதி"
நெல்லண்டைரோட்டு
தும்பளை, பருத்தித்துறை
5-9-68.

இ. சு. இராமநாதன்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்.
எம். 174 13-9

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அப்புக்குட்டி கைம்பெண் சின்னச்சிப்பிள்ளை, உரும்பராய்

இல. M B 8159 எதிராக —வழக்காளி

1. வாரித்தம்பி சண்முகநாதனும்
2. பெண் தங்கம்மாவும், இருவரது விலாசம் இணுவில் மேற்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8159 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968-ம் ஆண்டு ஐப்பசி மாசம் 16-ம் திகதி (16-10-68) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைதொகை: முதல் வட்டி ரூபாய் 2836-66 ம் 13-5-67 தொடக்கம் 28-2 67 வரைக்கும் ரூபாய் 2000/- க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 272-05 சதம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோயிற்பற்று உடுவில் இறை 'மண்ணம் தோட்டம்' நில. பர. 3. தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்பு உருத்தும் தென் கிழக்கில் இருக்கும் ஒழுங்கையால் இக்காணிக்கு கிழக்கெல்லையால் வரும் வண்டிப் பாதைப் பாவிப்புரித்தும் இந்த நிலப்பரப்பு மூன்றுக்கும் எல்லை கிழக்கு இளையதம்பி நன்னித்தம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு நாகமுத்து பதஞ்ஜலிக்கும் பெண் சிவபாக்கியத்திற்கும் உரிய ஆதனம், மேற்கு சின்னையாவின் பெண் நாகமணியின் ஆதனம். தெற்கு சிவசிதம்பரத்தின் பெண் மலர்வதனத்தின் ஆதனம் இது அடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

14, டேவிற் வீதி
யாழ்ப்பாணம்
11-8-68,

அ. போ எதிர்மனசிங்கி
கொமிசனரும் விலைமதிப்பாளரும்,
எம் 149, 6-9-68)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

உரும்பிராய் 1. இராசையா சிறினிவாசனும்
2 பெண் மனோன்மணியும் —வழக்காளிகள்

வழக்கு இல M. B 8086 எதிராக

கொக்குவில் கிழக்கு 1. செல்லையா கந்தையாவும்
2 பெண் சீலாவதியும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8086-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1968 ஆம் ஞூ ஐப்பசி மீ 16-ஆம் உ (16-10-68) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: - முதல் வட்டி ரூபா 10,286-10 ம் 26-3-66 தொடக்கம் 25-2-67 வரைக்கும் ரூபா 7000 -க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 385-82 ம். இதில் செலவுக் கணக்கால் ரூபா 200 இறுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை 'எருக்கலம்பத்தை' பர நில இலா ஐந்தேகால் (5¼) புதிதாகக் கட்டப்பட்ட கல்வீடும் கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றிற் பங்கும். எல்லை கிழக்கு செல்லப்பா கைம்பெண் பொன்னம்மாவுக்கும் மற்று பேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு செல்லையா பெண் அன்னம்மாவினதும் ஒழுங்கையும். மேற்கு ஒழுங்கையும் இராமலிங்கம் பெண் ஆச்சிப்பிள்ளையின் உரிமையாளரின் ஆதனமும். தெற்கு வயிரவநாதர் முத்துத்தம்பியின் உரிமையாளரின் ஆதனம். இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

18. 5-ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம், 13-8-68

அ. வெற்றிவேலு
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
(எம் 177 13-9-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 1563 T வழக்கில் காலஞ்சென்ற சின்னையா மாணிக்கம் சுப்பையாவின் தர்மகாரி வலைபுரம் கனகரத்தின் கைம்பெண் ஞானசவுந்தரி 17, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை யாழ்ப்பாணம் —வழக்காளி

வழக்கு இல M B 8072 எதிராக

ஆறுமுகம் சிவசாமியும் பெண் கமலேஸ்வரியும், வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம். —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 8072 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968–ஆம் ஞூ ஐப்பசிமீ 16 ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10–00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2415 -ம் 22–3–66 தொடக்கம் 3–10–66 வரைக்கும் ரூபா 1500 க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 230–50.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை 'காரைக்காடு' நிலபரப்பு 2 குளி 15-ம் செய்பயிர் வளர்பயிர்களும் வீடும் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு வயித்திலிங்கம் ஏகாம்பரத்தின் ஆதனம். மேற்கு சபாபதி பெண் சின்னத்தங்கத்தின் ஆதனம். தெற்கு முருகேசர் கந்தையாவின் ஆதனம். இன்னும் அதற்குச் சேர்ந்தவைகளும். பதிவு இலக்கம் D 249/291

239, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்,

இ. சு. தர்மரத்தினம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
(எம். 176 13-9-68)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

கொக்குவில் கிழக்கு 1. சுப்பையா துரைசாவும் மனைவி
2. முத்தம்மாவும் —வழக்காளிகள்

வழக்கு இலக்கம். M B 6794 எதிராக

கொக்குவில் கிழக்கு 1. கந்தையா கதிர்காமத்தம்பியும் மனைவி
2. பரமேஸ்வரியும் —எதிராளிகள்.

M. B. 6794 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவின்படி கீழ்க்காணும் ஆதனம் 1968 ஆம் ஞூ ஒக்ரோபர் மீ (ஐப்பசி) 15-ஆம் உ (15-10-68) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10–00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 6744. மேலும் 4000 - ரூபாவுக்கு 7-7-64 தொடக்கம் 23–6–65 வரைக்கும் வருடமொன்றுக்கு 12 % வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்குமவரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 341–02 சதமும். இதில் 21–1–67 ல் ரூபா 4000- மும் செலவில் ரூபா 100 ம் கட்டப்பட்டிருக்கிறது

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதியும் நல்லூர் கோயிற்பற்று கொக்குவில் கிழக்கிறை 'கூழ ஓடை' நிலப்பரப்பு 5, குளிகள் 11¾ கிழக்குப் பக்கமாக கற்களால் கட்டப்பட்ட தலைவாசலும் வீடும் இந்தக் காணியில் குசினியின் பகுதியும் கிணற்றுப் பங்கும். செய்பயிர் வளர் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு மார்க்கண்டு கந்தையாவுக்கும் பங்காளர்களுக்கும் ஆறுமுகம் கார்த்திகேசுவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு மயில்வாகனம் சிவவாசகம்பிள்ளைக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு முத்துக்குமாரு செல்லப்பாவுக்கும் மனைவி செல்லத்துரைக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கையும் மார்க்கண்டு கந்தையாவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். கிணற்றில் மேற்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காலுரிமையும். பிற நீங்கலாக இது முழுவதிலும் செரியலாய் அரைவாசிப் பங்கு.

"இராசகிரி"
643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம், 1-9-68

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனர்
Auctioneer and Valuer,
எம் 179 13—9—68

## வடபகுதி ஐக்கிய

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

ஒள்ள நிலத்தில் ஐந்தடுக்கு மாடிகள் கொண்ட ஓர் அழகான கட்டடத்தை அமைத்தார்கள். இம் மண்டபத்துக்கு "வீரசிங்க மண்டபம்" என்ற நாமம் சூட்டப்பட்டிருக்கின்றது. வடமாகாணத்திலுள்ள கூட்டுறவியக்கத்துக்குத் தந்தையாக அவர் விளங்கினர். வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைக்குச் சொந்தமாக ஒரு கட்டடம் தேவையென்பதை அவரே தமது சகாக்களுக்கு முதலில் வற்புறுத்தினர்.

குறித்த மண்டபத்துக்கு அப்பெரியாருடைய பெயரை இட்டமை போற்றத்தக்க செயலாகும். வட பகுதிக் கூட்டுறவு மேற்பார்வைச் சபைக் காரியாலயம் இக் கட்டடத்திலேயே திறுவப்பட்டிருக்கின்றது. 5-9-68 வியாழக்கிழமை யன்று கூட்டுறவாணையாளர் உயர் திரு. பலிதவீரமன் ஷை கட்டடத்தைத் திறந்துவைத்தனர். குறித்த கட்டடம் வடமாகாண மக்களுக்கு என்றும் பெருமையை அளித்துக் கொண்டிருக்கும். வடமாகாணக் கூட்டுற வியக்கத்திற்கு இக் கட்டடம் அச்சாணியாகத் திகழுகின்றது.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை மேலும் சிறந்து வளர்ந்து நமது நாட்டுக்கு அரிய தொண்டு புரியவேண்டுமென இறைவனைப் பிராத்திப்போமாக.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஆரியகுளத்தடி வண்ணார்பண்ணை கிழக்கு 1. சினனத்தம்பி இராசையா —வழக்காளி

எதிராக

82/2 பருத்தித்துறை ரேட்டு, யாழ்ப்பாணம் 1. பரமு சின்னத்தம்பி. —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 7844 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1968 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14 ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை. ரூபா 1000/- இதில் ரூபா 500/- க்கு 30-11-65 திகதி தொடக்கம் 8-11-66 திகதி வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 230-67 சதமும். முதல் கணக்கால் ரூபா 250/- கோட்டுச் செலவுக் கணக்கால் ரூபா 75/- கொடுபட்டது.

ஆதன விபரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை 'ஆரியகுளம்வயல்' கில. பர, நாலும் குளி 3 1/4, கல்வீடும் கிணறும் எல்லை கிழக்கு நாகன் சின்னப்பெடியன் மகள் வள்ளிக்குரிய ஆதனம், வடக்கு ஒழுங்கையும் முத்துமாரி அம்மன் கோயிலுக்குரிய ஆதனமும், மேற்கு முத்துமாரி அம்மன் கோயிலுக்குரிய ஆதனமும் வெங்கடேச பெருமான கோவிலுக்குரிய ஆதனமும், தெற்கு குளம். இதடங்கலும் விற்கப்படும். பதிவு இலக்கம் D 245/13

ந. ஆறுமுகம்
கொமிஷனர், விலைமதிப்பாளர்,
சித்தங்கேணி 8-8-1968
(எம். 176 13-9-68)

---

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டில் வழக்கு இலக்கம்: 92-8

1 புலோலி கிழக்கு விஜயரம் தேவேந்திரன்
2. ஷை பெண் பாக்கியலட்சுமி —வழக்காளிகள்

எதிராக

1. பருத்தித்துறை மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
2. ஷை பெண் சவீனம்மா —எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1968 ஆம் ஆ. ஐப்பசி மீ 9-ஆந் திகதி புதன்கிழமை (9-10-68) முற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த ஆதனமிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று பருத்தித்துறை சிங்கபாகுதேவன் குறிச்சி 'இலைநிற்ற தெணி' நிபர 19 இது உலாந்தா மேஸ்தர் K. வேல்முருகுவால் 5725 ம இலக்கத்தில் விஸ்தரிக்கப்பட்ட படத்தின்படி நி. பர 15 குளி 1, 7/32 இது T. சுப்பிரமணியம் உலாந்தா மேஸ்தரால் 397 -ம இலக்கத்தில் அளந்து கண்ட படத்தின்படி நி பர 14 குளி 13½ இதில் 1-ம் துண்டுக்கு நி பர 11 குளி 1, 1/8 இதில் 9-5-1950 ல் குறித்த உலாந்தா மேஸ்தர் T. சுப்பிரமணியத்தால் 1346-ம இலக்கத்தில் அளந்து கண்டபடி 1-ம் துண்டுக்கு நி பர 7 குளி 6, 24/32. இது K. வேல்முருகு உலாந்தா மேஸ்தரால் 6-7-1968 -ல் இல 3326 ல் அளந்த படப்படி 1, 2, 3, 4, 5, 6 துண்டுகளாக உள்ளன. இதில் 2-ம் துண்டுக்கு நி பர 1 எல்லை கிழக்கு வயிரமுத்து சைம் பெண் முத்துரட்ணத்துக்கும் மறு பேருக்குமுடைய ஆதனமும். வடக்கு முன் சொல்லிய 1 ம் துண்டும் சடையர் செல்லத்துரைக்கும் மறு பேருக்குமுடைய ஆதனம். மேற்கு ரோட்டு, தெற்கு ஆறுமுகம் கந்தையாவுக்குடைய 3 ம் துண்டு இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் கல்வீடு, கிணறு, குசினி, கற்கூசு தென்னைகள் மற்றும் இவ்வெல்லைக்குட்பட்ட முழுவதும் இதற்கு கோட்டால் அநுமதிக்கப்பட்ட விலை ரூபா:

தீர்வைத் தொகை:-

| | |
|---|---|
| ரூபா 2000/— 27-8-66 தொடக்கம் ரூபா | 2615-00 |
| 14-2-67 வரை வருஷமொன்றுக்கு 9 வீத வட்டி ரூ | 83-50 |
| ரூபா 2698-50 க்கு வட்டி 5 வீதம் 14-2-67 தொடக்கம் 15-7-68 வரை | 188-64 |
| | 2887-14 |
| கோட்டுச் செலவு (257-23 — 125-00 | 132-23 |
| | 3019-37 |
| கொடுத்தது | 1000-00 |
| மிகுதி வருமதி | 2019-37 |

"சந்நிதி வேல்"
பருத்தித்துறை.
9-9-68

கா. முத்துகுமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
Commissioner, Valuer & Licensed Auctioneer
எம் 180. 13-9-68

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. செல்வத்துரை நவரத்தினம் பெண்
2. பரமேஸ்வரி இருவரும் காங்கேசன்துறை —வழக்காளிகள்

இலக்கம். M. B. 8608 எதிராக

காசிப்பிள்ளை தில்லைநாயகம் காங்கேசன்துறை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8608 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1968-ஆம் ஆ ஐப்பசி மீ 10-ஆம் உ (10-10-68) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 13700/- 11-11-66 தொடக்கம் 16-3-67 வரைக்கும் ரூபா 10,000 -க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 508-46 சதம். கோட்டுச் செலவில் கொடுக்கப்பட்ட ரூபா 100/- குறைய.

காணியின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று பனை இறை 'கலவத்தை' நில பரப்பு 6 வீடும் பயிர் வகைகளும் கிழக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரிமையும் சேர்த்து எல்லை கிழக்கு ஒழுங்கை. இதன் விஸ்தீரணம் 12 குளிகள் இது பொதுப் பாவிப்புக்காக விடப்பட்டது வடக்கு சுப்பர் காசிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு இலங்கையர் பொன்னுச்சாமியின் ஆதனம். தெற்கு ஒழுங்கை. இது முழுவதும்.

வே. கோபாலபிள்ளை,
32, ஆஸ்பத்திரிவீதி, கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
யாழ்ப்பாணம், 14-8-68. எம்—178. 13-9-68

---

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 13—9—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

---

## Commission Sale
## கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இலக்கம்: 9413

அல்வாய் மேற்கு கந்தைபி சின்னத்துரை —வழக்காளி

எதிராக

1. சமரபாகுதேவன் குறிச்சி மூத்தன் கந்தனும்
2. பெண் இலட்சுமியும் —எதிரிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1968-ஆம் ஆ. ஐப்பசி மீ 5 ந் திகதி சனிக்கிழமை (5-10-68) முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று

1. இமையாணன் குறிச்சியிறை என்னங்குளம் கெற். பர. 13 3/4. ஷை கெற் பர. 10 இவைகளும் சமரபாகுதேவன் குறிச்சியிறை என்னங்குளம் கெற் பர. 29 இதுவும் ஒரே கண்டமாயிருக்கின்றது ஆட்சிப்படி கூடிய கெற். பர. 52 இதில் கெற் பர. 10 நீக்கி மிகுதிக்கு கெற் பர. 42. இதில் மேற்குப்புறமாக கெற் பர 22 எல்லை கிழக்கும் மேற்கும் சின்னையா பெண் காந்தியம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு முருகர் வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு ஆள்வான் சினியனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளடங்கலிற் சொரியலாய் அரைவாசியில் மூன்றிலொருபங்கும்.

2. சமரபாகுதேவன் குறிச்சியிறை முதலியன்தோட்டம் கில. பர. 18, 5/8 இது யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோரில் 509 ம் இலக்கத்தில் முடிந்த வெந்திஸ் உறுதியுடன் அணைந்திருக்கும் படத்தின்படி கில பர. 18 குளி 9 எல்லை கிழக்கு கந்தன் கறுவனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கும் தெற்கும் 1 ம் பேருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு கணபதி குட்டிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளடங்கலிற் சொரியலாய் 3/32 பங்கும்.

3 ஷை யிறை இலகுவில்ரெல்லை கில. பர. 2 3/4 பணியாதவடலி கில. பர 5 3/8 இப் பிரிவுகளுக்காக யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோரில் 476 ம இலக்கதல் முடிந்த வெந்திஸ் உறுதியுடன் அணைந்திருக்கும் படத்தின்படி கில பர. 10 எல்லை கிழக்கு குட்டியன் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு சின்னப்பொடியன் மூத்தனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். மேற்கு சின்னவன் மூத்தனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்டவை யடங்கலிற் சொரியலாய் 3/64 பங்கும்.

4. ஷை யிறை கொம்பன் சீமா கில. பர 9 எல்லை கிழக்கு குட்டியன் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு முருகன் சின்னவனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு சந்திரரவிகுமாருவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்டவை யடங்கலிற் சொரியலாய் 1/16 பங்கும்.

5. ஷை யிறை வெட்டுக்கட்டை கில. பர. 1 3/8, அரசகுல தோட்டம் கில பர. 2¼ இப் பிரிவுகளும் ஷை யிறைவெட்டுக்கட்டை கில. பர. 8½ இதுவும் இப்போது ஒரே காணியாயிருக்கின்றது இதற்குக் கூடிய கில பர. 12 1/8 எல்லை கிழக்கும் வடக்கும் கணபதி குட்டிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு கறுவல் சங்கரனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு சிவலை பெண் சிவப்பிக்கும் மறுபேருக்குமுடையவாதனம் இவ்வெல்லைக் குட்பட்டவைகளில் எதிரிகள் கட்டிய கிழக்குப்புறமாக நடுப்பெற இருக்கும் தெற்குவாசல் வீடும் அடுக்களையும் கொட்டில்களும் சொந்தமாகவும், மாமரம் பலாமரத்திற் சொரியலாய் மூவிரண்டு பங்கில் அரைவாசியும் மிகுதி கிலம் கிணறு அடங்கலிற் சொரியலாய் 1/12 பங்கில் அரைவாசியும்.

6. ஷை யிறை அரசகுல தோட்டம் கில பர. 2½ இதுவும், அரசகுல தோட்டம் கில. பர. 3, இதுவும் இப்போது ஒரேகாணியாயிருக்கிறது இதற்குக் கூடிய கில பர 5½ எல்லை கிழக்கு 1-ம் பேருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு வேலுப்பிள்ளை பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு ஆள்வான் சீனியனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு குட்டிபெண் முத்திக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்டவை யடங்கலிற் சொரியலாய் அரைவாசியில் அரைவாசியும்.

7. ஷை யிறை அரசகுலதோட்டம் கில. பர. 2 1/4 எல்லை கிழக்கும் தெற்கும் 1 ம் பேருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு வேலுப்பிள்ளை பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு குட்டி சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலிற் சொரியலாய் 5/12 பங்கில் அரைவாசி.

8. ஷை யிறை கொல்லன் பனையடி கில. பர. 12 3/8 எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு வேலுப்பிள்ளை பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு 1 ம் பேருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். தெற்கு முருகன் சின்னவனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் இதடங்கலிற் சொரியலாய் 1/3 பங்கில் அரைவாசியும் இதன் கிழக்கெல்லையாகிய ஒழுங்கைக்குக் கிழக்குப்புறமாக வருக்கும் கிணற்றிலும் இயந்திரத்திலும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுருத்தும்.

9. ஷை யிறை அரசகுல தோட்டம் கில. பர. 13 எல்லை கிழக்கு கந்தன் ஆழ்வானுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் வடக்கு 1 ம் பேருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு கதிரன் மகள் வள்ளியாருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு கதிரன் ஆள்வானுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் அடங்கலிற் சொரியலாய் 1/12 பங்கில் அரைவாசியும்.

தீரட்சிததொகை

| | | |
|---|---|---|
| ரூபா 2000/- க்கு 20-12-66 தொடக்கம் | ரூபா | 3543-30 |
| 25 4 67 வரை 10 வீத வட்டி | ரூபா | 73-66 |
| ரூபா 3616-96 க்கு 25-4-67 தொடக்கம் 15-7 68 வரை 5 வீத வட்டி | ரூபா | 217-75 |
| | | 3834-71 |
| செலவு | ரூபா | 292-48 |
| மொத்தம் | ரூபா | 4127-19 |

"உமாபதி"
தும்பளை,
பருத்தித்துறை, 5-9-68

இ. சு. இராமநாதன்,
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்.
Commissioner of Sales & Valuer
(எம், 173 13-9-68)